## தினத்தந்தி (06.08.2021)



# ரூ.2 லட்சத்து 36 ஆயிரத்தில் நலத்திட்ட உதவிகள்

கரூர், ஆக.6-

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலப்பணி திட்டத்தின் ஒரு பகுதியாக, நேற்று காகித நிறுவன வளாகத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் காகித நிறுவனத்தின் செயல் இயக்குனர் (இயக்கம்) கிருஷ்ணன், பொது மேலாளர் (மனிதவளம்) டேவிட் மாணிக்கம் ஆகியோர் கலந்துகொண்டு, ரூ.2 லட்சத்து 36 ஆயிரம் மதிப்பிலான மருத்துவ உபகரணங்கள், தளவாடங்கள் மற்றும் காசோலையை வழங்கினர். இதில் ஓலப்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார மையத்திற்கு ரூ.53 ஆயிரம் மதிப்புடைய மருத்துவ உபகரணங்கள், முககவசங்கள், கிருமி நாசினி, கையுறைகள் மற்றும் தளவாடங்கள் வழங்கப்பட்டன. மேலும் தடுப்பூசி செலுத்தியவர்களின் விவரங்களை இணையதளத்தில் பதிவு செய்திட ரூ.45 ஆயிரம் மதிப்பீட்டில் மடிக்கணினி வழங்கப்பட்டது. அய்யம்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார மையத்திற்கு ரூ.40 ஆயிரம் மதிப்புடைய மருத்துவ உபகரணங்கள் மற்றும் தளவாடங்கள் வழங்கப்பட்டன. வேலாயுதம்பாளையத்தில் அமைந்துள்ள மலைநகர் பூங்காவிற்கு வரும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ரூ.48 ஆயிரம் மதிப்புடைய 3 கல் இருக்கைகள் வழங்கப்பட்டன. நத்தமேட்டுப்பாளையம் கிராமத்தில் அமைந்துள்ள பகவதியம்மன் கோவில் திருப்பணிக்கு நிதியுதவியாக ரூ.50 ஆயிரத்திற்கான காசோலை வழங்கப்பட்டது.

காலைக்கதிர் (06.08.2021)

# டி.என்.பி.எல்., ஆலையில் நலத்திட்ட உதவி வழங்கல்

கரூர், ஆக. 6–

கரூர் டி.என்.பி.எல்., ஆலை சார்பில், 2.36 லட்சம் ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

கரூர் மாவட்டம், காகித புரம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன வளாகத்தில் மருத்துவ உபகரணங்கள், தளவாடங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. செயல் இயக்குனர் (இயக்கம்) கிருஷ்ணன் தலைமை வகித்தார். ஓலப்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு, 53 ஆயிரம் ரூபாய் மதிப்புடைய மருத்துவ உபகரணங்கள், முகக்கவசங்கள் கிருமி நாசினி, கையுறைகள் மற்றும் தளவாடங்கள் வழங்கப்பட்டன. மேலும், தடுப்பூசி செலுத்தியவர்களின் விபரங்களை இணையதளத்தில் பதிவு செய்திட, 45 ஆயிரம் ரூபாய் மதிப்பில் மடிக்கணினி வழங்கப்பட்டது.

அய்யம்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், 40 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள மருத்துவ உபகரணங்கள், தளவாடங்கள் வழங்கப்பட்டன. வேலாயுதம்பாளையத்தில் அமைந்துள்ள மலைநகர் பூங்காவிற்கு வரும் மக்களின் பயன்பாட்டிற்காக, 48 ஆயிரம் ரூபாய் மதிப்பில், மூன்று கல் இருக்கைகள் வழங்கப்பட்டன.

நத்தமேட்டுப்பாளையம், பகவதியம்மன் கோவில் திருப்பணிக்கு நிதியுதவியாக, 50 ஆயிரம் ரூபாய் என, மொத்தம், 2.36 லட்சம் ரூபாய் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. நிகழ்ச்சியில் நிறுவன மேலாளர் (மனித வளம்)டேவிட் மாணிக்கம் உட்பட பலர் பங்கேற்றனர்.

தினமணி (07.08.2021)

# டிஎன்பிஎல் சார்பில் மருத்துவ உபகரணங்கள், நலத்திட்ட உதவிகள் வழங்கல்



ஓலப்பாளையத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு மடிக்கணினி மற்றும் மருத்துவ உபகரணங்களை மருத்துவர் அனிதாவிடம் வழங்குகிறார்கள் காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்)கிருஷ்ணன், பொது மேலாளர் (மனிதவளம்) டேவிட் மாணிக்கம் உள்ளிட்டோர்.

கரூர், ஆக.6: டிஎன்பிஎல் ஆலை சார்பில் ரூ.2.36 லட்சம் மதிப்பில் மருத்துவ உபகரணங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வியாழக்கிழமை வழங்கப்பட்டன.

புகழூர் காகித ஆலை சார்பில் ஆரம்பசுகாதார நிலையங்களுக்கு மருத்துவ உபகரணங்கள் மற்றும் தளவாட பொருள்கள், நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி ஆலை வளாகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. விழாவுக்கு ஆலையின் செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன் மற்றும் பொது மேலாளர் (மனிதவளம்)டேவிட் மாணிக்கம், ஆகியோர் தலைமை வகித்து ரூ.2.36 லட்சம் மதிப்பிலான மருத்துவ உபகரணங்கள், தளவாடங்களை வழங்கினர்.

இதில், ஓலப்பாளைம், அரசு ஆரம்ப சுகாதார நிலையம், அய்யம்பாளையம் சுகாதாரநிலையம் ஆகியவற்றின் மருத்துவப் பணியாளர்கள் பொது மக்களுக்கு கரோனா தடுப்பு சிகிச்சை அளிப்பதற்காக ரூ.93,000 மதிப்பிலான மருத்துவ உபகரணங்கள், முகக்கவசங்கள் கிருமி நாசினி, கையுறைகள் மற்றும் தளவாடங்களும், ரூ.45,000 மதிப்பில் மடிக்கணினியும் வழங்கப்பட்டன. மேலும், வேலாயுதம்பாளையம் மலைநகர் பூங்காவிற்கு ரூ.48,000 மதிப்பில் 3 கல் இருக்கைகள், நத்தமேட்டுப்பாளையம் பகவதியம்மன் கோயில் திருப்பணிக்கு ரூ.50,000 என மொத்தம் ரூ.2.36 லட்சத்திற்கான காசோலை வழங்கப்பட்டது.

**தினகரன் (09.08.2021)**

### கரூர் டிஎன்பிஎல் காகித ஆலை சார்பில்

# மருத்துவ உபகரணங்கள், நலத்திட்ட உதவி வழங்கல்



கரூர் ஒன்றியம் வேட்டமங்கலம் ஊராட்சி ஓலப்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவரிடம் மடி கணினி மற்றும் மருத்துவ உபகரணங்களை காகித ஆலை நிறுவன செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன், பொது மேலாளர் (மனிதவளம்) டேவிட் மாணிக்கம் ஆகியோர் வழங்கினர்.

க.பரமத்தி, ஆக. 9: கரூர் ஒன்றியம் காகிதபுரம் பேரூராட்சியில் இயங்கி வரும் டிஎன்பிஎல் காகித ஆலை பல்வேறு சமுதாயப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக வேட்டமங்கலம் அருகே ஓலப்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ பணியாளர்கள், பொது மக்களுக்கு கொரோனா தடுப்பு சிகிச்சை அளிப்பதற்காகரூ.53ஆயிரம்மதிப்பிலான மருத்துவ உபகரணங்கள், முகக்கவசங்கள் கிருமி நாசினி, கையுறைகள் வழங்கப்பட்டன.

மேலும் கொரோனா தடுப்பூசி முகாம்களில் தடுப்பூசி செலுத்தியவர்களின்விபரங்களைஉடனே இணைய தளத்தில் பதிவு செய்திட ஏதுவாக ரூ.45 ஆயிரம் மதிப்பிலான மடிக்கணினியும், அய்யம்பாளையம் அரசு ஆரம்ப துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவ பணியாளர்கள், பொதுமக்களுக்குகொரோனாதடுப்பு சிகிச்சை அளிப்பதற்காக ரூ.40ஆயிரம்மதிப்பிலான மருத்துவஉபகரணங்களையும், வேலாயுதம்பாளையம்மலைநகர்பூங்காவிற்கு வரும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ரூ.48 ஆயிரம் மதிப்புடைய மூன்றுகல்இருக்கைகளும் நத்தமேட்டுப்பாளையம் பகவதியம்மன் திருக்கோவில் திருப்பணிக்கு நிதியுதவியாக ரூ.50 ஆயிரத்திற்கான காசோலை வழங்கப்பட்டது.

விழாவில்காகிதஆலை நிறுவனசெயல்இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன், பொது மேலாளர் (மனிதவளம்) டேவிட் மாணிக்கம் ஆகியோர் கலந்து கொண்டு ரூ.2.36 லட்சம் மதிப்பிலான மருத்துவ உபகரணங்கள்,தளவாடங்கள்மற்றும்காசோலையை வழங்கினர்.

# மாலை மலர் (07-08-2021)



ஒலப்பாளையத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ.98,000 மதிப்புடைய மடிக்கணினி மற்றும் மருத்துவ உபகரணங்களை மருத்துவர் டாக்டர்.அனிதாவிடம் காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் ஏசு.கிருஷ்ணன், பொது மேலாளர் டேவிட் மாணிக்கம் ஆகியோர் வழங்கிய காட்சி.

### ஆரம்ப சுகாதார மையங்களுக்கு

## ரூ.2.36 லட்சம் மதிப்பிலான உபகரணங்கள், நலத்திட்ட உதவிகள்

### தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் வழங்கியது

பரமத்திவேலூர், ஆக.7–

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலப்பணித் திட்டத்தின் ஒரு பகுதியாக, கொரோனா நோய் பரவலை தடுக்கும் விதமாக, சுற்றுப்புற கிராமங்களில் பொதுமக்கள் கூடும் இடங்களை தேர்வு செய்து, பொதுமக்களுக்கு கொரோனா விழிப்புணர்வு ஏற்படுத்தி முகக்கவசம் அணியாதவர்களுக்கு இலவசமாக முகக்கவசங்கள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கொரோனா நோய் எதிர்ப்பு சக்திக்காக கபசுர குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

இதன் தொடர்ச்சியாக ஒலப்பாளைம் அரசு ஆரம்ப சுகாதார மையத்தின் மருத்துவ பணியாளர்கள் பொது மக்களுக்கு கொரோனா தடுப்பு சிகிச்சை அளிப்பதற்காக ரூ.53 ஆயிரம் மதிப்பிலான மருத்துவ உபகரணங்கள், முகக்கவசங்கள் கிருமிநாசினி, கையுறைகள் மற்றும் தளவாடங்கள் வழங்கப்பட்டன. மேலும், கொரோனா தடுப்பூசி முகாம்களில் தடுப்பூசி செலுத்தியவர்களின் விவரங்களை இணையதளத்தில் பதிவு செய்திட ரூ.45 ஆயிரம் மதிப்பீட்டில் மடிக்கணினி வழங்கப்பட்டது.

அய்யம்பாளையம், அரசு ஆரம்ப சுகாதார மையத்தின் மருத்துவ பணியாளர்கள் பொது மக்களுக்கு கொரோனா தடுப்பு சிகிச்சை அளிப்பதற்காக ரூ.40 ஆயிரம் மதிப்புடைய மருத்துவ உபகரணங்கள், மற்றும் தளவாடங்கள் வழங்கப்பட்டன.

வேலாயுதம்பாளையத்தில் அமைந்துள்ள மலைநகர் பூங்காவிற்கு வரும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ரூ.48 ஆயிரம் மதிப்புடைய 3 கல் இருக்கைகள் வழங்கப்பட்டது.

நத்தமேட்டுப்பாளையம் கிராமத்தில் அமைந்துள்ள பகவதியம்மன் கோவில் திருப்பணிக்கு நிதியுதவியாக ரூ.50 ஆயிரத்துக்கான காசோலை வழங்கப்பட்டது. மொத்தம் ரூ.2.36 லட்சத்துக்கான மருத்துவ உபகரணங்கள், தளவாடங்கள் மற்றும் காசோலை வழங்கப்பட்டது.

இதை காகித நிறுவன வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்) ஏசு.கிருஷ்ணன், பொது மேலாளர் (மனிதவளம்) டேவிட் மாணிக்கம், ஆகியோர் கலந்து கொண்டு வழங்கினார்கள்.

CS Scanned with CamScanner